# கல்வியும் சுகாதாரமும் இரு கண்கள்

## கலைஞர் நூலகத் திறப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின்





மதுரையில் சனிக்கிழமை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்த பிறகு, அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் கையேட்டில் குறிப்பை எழுதுகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ. வேலு, உதயநிதி ஸ்டாலின், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பி. மூர்த்தி, மக்களவை உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராசா. (வலது) நூலகத்தின் முகப்புத் தோற்றம்.

**மதுரை, ஜூலை 15:** 'கல்வியும் சுகாதாரமும் திராவிட மாடலின் இரு கண்கள்' என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

மதுரை ஆயுதப் படை மைதானத்தில் சனிக்கிழமை நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நூலகத் திறப்பு விழாவில் அவர் மேலும் பேசியதாவது:

திராவிட மாடல் ஆட்சியின் இரு கண்கள் என நான் அடிக்கடி கூறுவது கல்வியும் சுகாதாரமும் தான். இதனால்தான், கருணாநிதி நூற்றாண்டு தொடக்கமான கடந்த மாதம் 15-ஆம் தேதி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை சென்னை கிண்டியில் திறந்துவைத்தேன். தற்போது கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் திறந்து வைத்துள்ளேன். சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்வோம் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் சென்னையில் உயர் சிறப்பு மருத்துவமனையும், மதுரையில் இந்த நூலகமும். இந்த இரண்டும் தேர்தல் அறிக்கையில் திமுக அளிக்காத வாக்குறுதிகள்.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என அறச்சீற்றம் கொண்டு கண்ணகி எரித்த மதுரை மாநகரத்தில் லட்சக்கணக்கான நூல்கள் கொண்ட இந்த நூலகத்தால் அறிவுத் தீ பரவப் போகிறது. திராவிட இயக்கம் அரசியல் இயக்கம் மட்டுமல்ல, அறிவு இயக்கமும்தான். தமிழ்ச் சமுதாயத்தின் எழுச்சிக்கும் மீட்சிக்கும் தேவையான கருத்துகளை எழுதி, பேசி, படித்து வளர்ந்தவர்கள்தான் திராவிட இயக்கத்தினர்.

படிப்பகங்களால் வளர்ந்து, ஆட்சிப் பொறுப்புக்கு வந்து பிரம்மாண்டமான நூலகங்களைக் கட்டி வருகிறோம். மதுரையில் 2,13,338 சதுர அடி பரப்பளவில் ரூ.120.75 கோடியில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவுக்கு தொழிலதிபர் சிவ நாடாரையும் அவரது மகள் ரோஷினி நாடாரையும் சிறப்பு விருந்தினர்களாக அழைத்தோம். சிவ நாடார் மிகப்பெரிய தொழில் அதிபர் மட்டுமல்ல, இந்தியாவிலேயே அதிகமான தொகையை நன்கொடையாக வழங்கி வருபவர். உனக்கு பணம் வரும் போது பிறருக்கு உதவி செய் என்று அவரது தாய் சொன்னதால், அறக்கட்டளை தொடங்கி உதவி வருகிறார்.

அவருடைய மகள் ரோஷினி, ஹெச்சிஎல் நிறுவனத்தின் தலைவராக செயல்பட்டு வருகிறார். பெண்கள் அனைத்துப் பொறுப்புகளிலும் பணியாற்ற வேண்டும் என்ற பெரியாரின் கனவு நனவாகும் காட்சியின் அடையாளமாகவும், இவர்கள் இருவரும் இந்த விழாவில் பங்கேற்றனர்.

**படிப்புதான் நிலையான சொத்து:** மாணவர்களைச் சந்திக்கும் போதெல்லாம் நன்றாக படியுங்கள் என்றுதான் கூறி வருகிறேன். படிப்பும், வேலைவாய்ப்பும் நம்முடைய உரிமை என்று கிளர்ந்தெழுந்த இனம்தான் திராவிட இனம். எத்தனை தடைகள் வந்தாலும், படிப்பை மட்டும் யாரும் கைவிடக் கூடாது. படிப்பு மட்டும்தான் யாராலும் திருட முடியாத நிலையான சொத்து. அந்தப் படிப்பை நாம் எல்லோரும் அடைய வேண்டும் என்று கருணாநிதி உருவாக்கியதுதான் இன்றைய நவீன தமிழ்நாடு.

இன்றைக்கு தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பெரும் வளர்ச்சி கருணாநிதியால் உருவாக்கப்பட்டவை. ஓர் இனத்தின் வளர்ச்சிக்கு முதலில் தேவை கல்வி. அதை முதலில் கொடுத்தது, திராவிட இயக்கத்தின் தாய் கட்சியான நீதிக் கட்சி. தமிழகத்தில் கல்விப் புரட்சியை ஏற்படுத்தியது திமுக ஆட்சி. புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி என்று முதல்வர் கருணாநிதி அறிவித்த பிறகுதான் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் பள்ளிகளுக்கு வந்தனர். இதை அறிந்த பெருந்தலைவர் காமராஜரே பாராட்டியுள்ளார். மேலும், காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தவரும் கருணாநிதி தான்.

காமராஜர் பிறந்த நாளில்தான் இந்த நூலகத்தைத் திறந்துள்ளோம். தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளை அதிகப்படுத்தியது, அனைத்துப் பள்ளிகளிலும் நூலகம், உடற்கல்வியை கட்டாயமாக்கியது, அறிவியல் கூடங்களை அமைத்தது, பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்கியது, சத்துணவில் வாரம் 5 நாள்கள் முட்டைகளை வழங்கியது, கிராமப்புற மாணவர்களுக்கும், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கும் சலுகைகள் வழங்கியது, அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பேருந்து பயண அட்டை, தமிழ் வழியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை, கணினிப் பாடத்தை அறிமுகம் செய்தது என சாதனைகளைச் செய்தவர் கருணாநிதி.

இதன் தொடர்ச்சியாகத்தான் திராவிட மாடல் அரசும் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. தரமான கல்வியை வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. முதலிடத்துக்கு முன்னேற வேண்டும் என்பதற்கான அனைத்துப் பணிகளையும் செய்து வருகிறோம். இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், 'எண்ணும் எழுத்தும்' இயக்கம், மாணவர்களின் பசியைப் போக்கும், காலை சிற்றுண்டித் திட்டம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்றார் அவர்.

விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வரவேற்புரையாற்றினார். அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, பி. மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன், ஹெச்.சி.எல். நிறுவனர் சிவ நாடார், அவரது மகள் ரோஷினி, மாவட்ட ஆட்சியர் மா.சௌ. சங்கீதா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, புதுநத்தம் சாலையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து நூலகத்துக்குள் சென்று அங்கு அமைக்கப்பட்டிருந்த அரங்குகள் உள்ளிட்டவற்றை பார்வையிட்டார்.

### தமிழகத்தின் கலைநகர் மதுரை

விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: தமிழகத்தின் தலைநகர் சென்னை என்றால், தமிழகத்தின் கலைநகர் மதுரை. தலைநகர் சென்னையில் அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி, அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அவரது தம்பி கருணாநிதி அமைத்துத் தந்தார். இன்று கருணாநிதி நூற்றாண்டில், தமிழகத்தின் கலைநகரான மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் என்னும் தென் தமிழகத்தின் அறிவாலயம் திறக்கப்பட்டது.

**கருணாநிதியே ஒரு நூலகம் தான்:** கருணாநிதியைப் பொருத்தவரையில் எந்தத் துறையில் நுழைந்தாலும் அந்தத் துறையில் அவர்தான் முதலிடம் வகிப்பார். மாணவராக இருந்தபோதே கையெழுத்துப் பிரதியாக பத்திரிகையை நடத்தினார். இலக்கியத் துறையில் கவிஞர், சிறுகதை ஆசிரியர், நாவலாசிரியர், உரையாசிரியர் என அனைத்திலும் முத்திரை பதித்தார். மேலும், கருணாநிதியே மிகப்பெரிய நூலகம் தான். அவர் எழுதிய புத்தகங்களை மட்டுமே வைத்தால்கூட அதுவே பெரிய நூலகம் போல இருக்கும் என்றார் அவர்.

EVA STALIN IAS

# ரூபாய்-திராமில் வர்த்தகம்: இந்தியா-யுஏஇ ஒப்பந்தம்

**அபுதாபி/மும்பை, ஜூலை 15:** ஐக்கிய அரபு அமீரகத்தின் (யுஏஇ) அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசிய போது, அமெரிக்க டாலருக்கு பதிலாக இரு நாடுகளின் செலாவணிகளான ரூபாய்-திராமை கொண்டு இருதரப்பு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் கையொப்பமானது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் சனிக்கிழமை அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, அந்நாட்டு அதிபர் அல் நஹ்யானை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அந்தப் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமானதாக இருந்ததாகப் பிரதமர் மோடி தெரிவித்தார்.

இருதரப்பு வர்த்தகத்தை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக தலைவர்கள் இருவரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இருதரப்பு வர்த்தகத்தை இரு நாடுகளின் செலாவணிகளில் மேற்கொள்வதற்கான ஒப்பந்தமும் கையொப்பமானது. இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ)-யுஏஇ மத்திய வங்கி இடையே அதற்கான ஒப்பந்தம் கையொப்பமானது.

ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ்-யுஏஇ மத்திய வங்கி ஆளுநர் கலீத் முகமது பலாமா ஆகியோர் ஒப்பந்தத்தைப் பரிமாறிக் கொண்டனர். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளின் வர்த்தகர்களும் தங்களது உள்ளூர் செலாவணிகளைப் பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். மேலும், இரு நாடுகளுக்கு இடையேயான முதலீடுகளை அதிகரிக்கவும் இந்த ஒப்பந்தம் உதவும் என ஆர்பிஐ தெரிவித்துள்ளது.

இந்தியா-யுஏஇ இடையே யுபிஐ-ஐபிபி இணையவழிப் பணப் பரிவர்த்தனை அமைப்புகளை ஒருங்கிணைப்பதற்கான ஒப்பந்தமும் ஆர்பிஐ-யுஏஇ மத்திய வங்கி இடையே கையொப்பமானது. மேலும், ரூபே கார்டை யுஏஇ கார்டுடன் இணைப்பதற்கான ஒப்பந்தமும் கையொப்பமானது. ஐக்கிய அரபு அமீரகத்தில் தில்லி ஐஐடி-யின் கிளை வளாகத்தை அமைப்பதற்கான ஒப்பந்தமும் பேச்சுவார்த்தையின்போது கையொப்பமாகியது. இரு நாடுகளின் கல்வி அமைச்சகங்கள் சார்பில் அந்த ஒப்பந்தம் கையொப்பமானது.



அபுதாபியில் ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை சனிக்கிழமை சந்தித்த பிரதமர் நரேந்திர மோடி.

**வலுவான நல்லுறவு:** பேச்சுவார்த்தைக்குப் பிறகு பிரதமர் மோடி கூறுகையில், 'இரு நாடுகளுக்கு இடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் கடந்த ஆண்டு கையொப்பமானதில் இருந்து இருதரப்பு வர்த்தகம் 20 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது.

தற்போது இருதரப்பு வர்த்தக நடவடிக்கைகளை இரு நாடுகளின் செலாவணிகளில் மேற்கொள்வதற்கு கையொப்பமாகியுள்ள ஒப்பந்தமானது, வலுவான பொருளாதார ஒத்துழைப்பையும் பரஸ்பர நம்பிக்கையையும் வெளிக்காட்டுகிறது. அந்த ஒப்பந்தமானது இருதரப்பு வர்த்தகம்-முதலீடுகளை மேலும் அதிகரிக்கும்.

இந்தியா - யுஏஇ ஒத்துழைப்பை வெளிக்காட்டும் வகையில் ஒப்பந்தங்கள் கையொப்பமாகியுள்ளன. ரூபாய்-திராம் ஒப்பந்தமானது, சர்வதேச பணப் பரிவர்த்தனைகளை எளிமையாக்கும்.

**உண்மையான நட்பு நாடு:** யுஏஇ அதிபர் அல் நஹ்யானிடமிருந்து எப்போதும் சகோதர பாசத்தை உணர்கிறேன். இரு நாடுகளுக்குமிடையேயான நல்லுறவு விரிவடைந்ததற்கு அதிபர் அல் நஹ்யானின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இந்தியர்கள் ஒவ்வொருவரும் ஐக்கிய அரபு அமீரகத்தை உண்மையான நட்பு நாடாகக் கருதுகின்றனர்.

நடப்பாண்டுக்கான ஐ.நா. பருவநிலை மாநாடு யுஏஇ தலைமையில் நடைபெறவுள்ளது. அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை யுஏஇ சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. அந்த மாநாட்டில் நிச்சயமாகப் பங்கேற்க வேண்டும் என்ற எண்ணம் தற்போது ஏற்பட்டுள்ளது' என்றார்.

## தாயகம் திரும்பினார் பிரதமர்

பிரான்ஸ், ஐக்கிய அரபு அமீரக நாடுகளுக்கான அரசுமுறைப் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி சனிக்கிழமை இரவு தாயகம் திரும்பினார்.

யுஏஇ பயணம் குறித்து அவர் வெளியிட்ட ட்விட்டர் பதிவில், 'யுஏஇ பயணம் ஆக்கபூர்வமானதாக இருந்தது. உலகை சிறப்புடையதாக மாற்றுவதற்காகப் பல்வேறு விவகாரங்களில் இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன. யுஏஇ-யில் வழங்கப்பட்ட சிறப்பான வரவேற்புக்காக அதிபர் அல் நஹ்யானுக்கு நன்றி தெரிவிக்கிறேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தில்லி திரும்பியதும் அங்கு ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு நிலவரம் குறித்து துணைநிலை ஆளுநர் சக்சேனாவிடம் பிரதமர் மோடி கேட்டறிந்ததாக அவரது அலுவலகம் தெரிவித்தது.

# இந்திய கடற்படைக்கு 26 ரஃபேல் விமானங்கள்: உறுதி செய்தது டஸால்ட் ஏவியேஷன்

**புது தில்லி, ஜூலை 15:** பிரான்ஸின் டஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடமிருந்து இந்திய கடற்படைக்கு 26 ரஃபேல் போர் விமானங்கள் வாங்கப்படவிருப்பதை, அந்நிறுவனம் சனிக்கிழமை உறுதி செய்தது.

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் அந்நாட்டு அதிபர் இமானுவல் மேக்ரானுடன் பிரதமர் மோடி வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதன்பிறகு வெளியிடப்பட்ட ஆவணங்களில் ரஃபேல் கொள்முதல் குறித்து எந்த விவரமும் இடம்பெறாத நிலையில், டஸால்ட் ஏவியேஷன் நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

ரஃபேல் போர் விமானத்தின் கடற்படை பயன்பாட்டுக்கான வகையை இந்தியா தேர்வு செய்து அறிவித்துள்ளது. இந்த தற்கால தலைமுறை போர் விமானங்கள், இந்திய கடற்படையில் இணைக்கப்படும்.

கடற்படைக்கான ரஃபேல் போர் விமானத்தின் சோதனை நடவடிக்கை, இந்தியாவில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. அப்போது, இந்திய கடற்படையின் செயல்பாட்டு தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்வதோடு, இந்திய விமானந்தாங்கி கப்பலின் சிறப்பம்சங்களுக்கு கச்சிதமாகப் பொருந்தும் என்பதை ரஃபேல் போர் விமானம் நிரூபித்தது. அதன் பின்னரே, கடற்படைக்கு ரஃபேல் போர் விமானங்களைத் தேர்வு செய்யும் முடிவை இந்தியா மேற்கொண்டது.

இந்திய விமானப் படையின் பயன்பாட்டில் ஏற்கெனவே 36 ரஃபேல் போர் விமானங்கள் உள்ளன. அவை திருப்திகரமான செயல்பாட்டை உறுதி செய்துள்ளன. அதேபோல், இந்திய கடற்படையில் 26 ரஃபேல் போர் விமானங்களும் இணைக்கப்படும்.

இதன்மூலம் வான்வெளியிலும் கடற்பரப்பிலும் இறையாண்மையை உறுதி செய்வதில் பிரான்ஸ் நாட்டை போன்ற ராணுவத் தேர்வை கொண்ட முதல் நாடாக இந்தியா மாறும்.

ரஃபேல் விமானங்களை இந்தியா தேர்வு செய்திருப்பது, அந்த விமானத்தின் திறன்மிக்க செயல்பாடு, இந்தியப் படைகள்-டஸால்ட் ஏவியேஷன் இடையிலான தொடர்புகளின் ஒப்பற்ற தரம் மற்றும் இந்தியா-பிரான்ஸ் வியூகரீதியிலான உறவின் முக்கியத்துவத்தை உறுதி செய்துள்ளது என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்தின் தலைவரும் தலைமைச் செயல் அதிகாரியுமான எரிக் ட்ராப்பியர் கூறுகையில், 'இந்திய படைகளுடனான எங்களது கூட்டுறவின் 70-ஆவது ஆண்டை கொண்டாடும் இந்த வேளையில், தற்போதைய நம்பிக்கை மற்றும் உறுதிப்பாட்டின் புதிய அடையாளத்துக்காக இந்திய அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிக்கிறேன். இந்திய கடற்படையின் எதிர்பார்ப்புகளை நாங்கள் முழுமையாக பூர்த்தி செய்வோம்' என்றார்.

முன்னதாக, இந்திய கடற்படைக்கு பிரான்ஸின் டஸால்ட் ஏவியேஷன் நிறுவனத்திடமிருந்து 26 ரஃபேல்-எம் போர் விமானங்களைக் கொள்முதல் செய்ய மத்திய அரசு கடந்த வியாழக்கிழமை ஒப்புதல் அளித்தது.

இக்கொள்முதல் தொடர்பான பரிந்துரைக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்புத் தளவாடங்கள் கொள்முதல் குழுமத்தால் (டிஏசி) ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டியிட்டிருந்த அறிக்கையில், '26 ரஃபேல்-எம் போர் விமானங்கள், அவற்றுக்கான கருவிகள் உள்ளிட்டவற்றைக் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் பிரான்ஸ் அரசுடன் மேற்கொள்ளப்படவுள்ளது. போர் விமானத்துக்கான விலையை நிர்ணயம் செய்வதற்கான பேச்சுவார்த்தை அந்நாட்டு அரசுடன் விரைவில் தொடங்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டது.

ஐஎன்எஸ் விக்ராந்த் விமானந்தாங்கி கப்பலில் இயக்குவதற்காக ரஃபேல் போர் விமானங்களை இந்தியா கொள்முதல் செய்வது குறிப்பிடத்தக்கது.



# வரலாறு படைத்தார் மார்கெட்டா வோண்டுரோஸோவா

## தரவரிசையில் இல்லாமல் பட்டம் வென்ற வீராங்கனை

பட்டத்துடன் மார்கெட்டா வோண்டுரோசோவா.

**லண்டன், ஜூலை 15:** விம்பிள்டன் டென்னிஸ் போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார் செக். குடியரசின் மார்கெட்டா வோண்டுரோசோவா. இதன் மூலம் 60 ஆண்டுகளில் தரவரிசையில் இல்லாமல் பட்டம் வென்ற முதல் வீராங்கனை என்ற சாதனையையும் நிகழ்த்தியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் பந்தயங்களில் மூன்றாவதான விம்பிள்டன் போட்டி லண்டன் ஆல் இங்கிலாந்து மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் செக். குடியரசின் மார்கெட்டா வோண்டுரோசோவாவும்-துனிசியாவின் ஆன்ஸ் ஜபியுரும் மோதினர்.

தரவரிசையில் 6-ஆவது இடத்தில் உள்ளார் ஆன்ஸ் ஜபியர். அதே நேரம் 42-ஆவது இடத்தில் உள்ளார் மார்கெட்டா.

முதல் செட்டில் ஜபியர் முன்னிலை பெற்றநிலையில், சுதாரித்துக் கொண்ட மார்கெட்டா 5-4 என முன்னிலை பெற்றதுடன் 6-4 என முதல் செட்டை கைப்பற்றினார்.

இரண்டாவது செட்டில் ஆன்ஸ் ஜபியுரும் சிறிது ஆதிக்கம் செலுத்தி 3-1 என முன்னிலை பெற்றார். ஆனால் ஜபியரின் தொடர்ச்சியான தவறுகளை தனக்கு சாதகமாக்கிக் கொண்ட வோண்டுரோசோவா 6-4 என இரண்டாவது செட்டையும் வசப்படுத்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

**முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம்** மார்கெட்டா வோண்டுரோசோவா வெல்லும் முதல் கிராண்ஸ்லாம் பட்டம் இதுவாகும். கடந்த 2019 பிரெஞ்ச் ஓபனில் ஆஷ்லி பார்டியிடம் இறுதி ஆட்டத்தில் தோற்றிருந்தார் அவர்.

ஜேனா நவோட்னா, பெட்ரா குவிட்டோவா ஆகியோர் செக். குடியரசு தரப்பில் விம்பிள்டன் பட்டம் வென்றுள்ளனர்.

**ஜபியரின் தொடரும் கனவு** முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ஆப்பிரிக்க-அரேபிய வீராங்கனை என்ற சாதனையை படைக்க வேண்டும் என்ற ஆன்ஸ் ஜபியரின் கனவு தகர்ந்து விட்டது. இறுதி ஆட்டத்துக்கான அவரது பயணத்தில் 4 முன்னாள் கிராண்ட்ஸ்லாம் சாம்பியன்களை வீழ்த்தி இருந்தார் ஜபியர்.

தோற்ற சோகத்தில் ஆன்ஸ் ஜபியர்